NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 8 September 2022

# சிறிய நாடுகளின் சவால்களை எடுத்துரைக்கும் பொதுத் தூதர் டோமி கோவின் நூல் வெளியீடு

இர்ஷாத் முஹம்மது

சிறிய நாடாக இருந்தாலும் மற்ற சிறிய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயல்பட்டால் ஏற்படும் நல்ல விளைவுகளையும் சிங்கப்பூர் அவ்வாறு சிறிய நாடுகளின் மாநாட்டை ஐக்கிய நாடுகள் சபையில் உருவாக்கிய வரலாற்றையும் குறிப்பிட்டு 'ஸ்மால் ஸ்டேட்ஸ் இன் எ பிக் வோர்ல்ட்' எனும் 'பெரிய உலகத்தில் சிறிய நாடுகள்' என்ற தலைப்பில் புத்தகத்தைத் தொகுத்து வெளியிட்டுள்ளார் பொதுத் தூதர் பேராசிரியர் டோமி கோ.

கடந்த 1992ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் சிங்கப்பூர் தூதராகப் பணியாற்றிய திரு சியூ டாய் சூ சிறிய நாடுகளின் மாநாட்டை உருவாக்கினார். அதை நினைவுகூர்ந்து, தேசிய நூலக வாரியக் கட்டடத்தில் நேற்று நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்த திரு சியூவிற்கு நன்றி நல்கினார் பேராசிரியர் டோமி கோ.

வெளியுறவு அமைச்சின் நிரந்தரச் செயலாளர் ஆல்பர்ட் சுவா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டார்.

பல நாடுகளின் தூதர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் நிகழ்ச்சிக்கு வருகை தந்தனர். வெளியீடு கண்ட நூலில் 29 நாடுகளைச் சேர்ந்த 48 பேரின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'உக்ரேன், அனைத்துலக சட்டம், சிறிய நாடுகளின் பாதுகாப்பு' என்ற தலைப்பிலான கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

தமது சுதந்திரத்துக்கும் எல்லை பாதுகாப்புக்கும் தைரியமாக தற்காப்பை நிலைநாட்டிவரும் உக்ரேனுக்குத் தமது வாழ்த்துகளை சிங்கப்பூருக்கு வருகை புரிந்த உக்ரேன் தூதர் கெடரினா ஸெலென்கோவிடம் பேராசிரியர் கோ கூறினார்.

அந்தக் கருத்தரங்கில் 16 உறுப்பு நாடுகள் தொடக்கத்தில் இருந்தன. இன்று 108 உறுப்பு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. பத்து மில்லியனுக்கும் கீழே மக்கள் தொகையைக் கொண்ட நாடுகள் இந்தக் கருத்தரங்கிற்குத் தகுதிபெறும்.

இச்சூழலில் ஐக்கிய நாடுகள் சபையின் பெரும்பாலான உறுப்பு நாடுகள் அந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டுள்ளதால் அந்நாடுகள் ஒன்று மற்றொன்றுக்கு தோள் கொடுத்து பெரிய நாட்டையும் வாக்கெடுப்புகளில் எதிர்கொள்ள முடியும் என்றார் பேராசிரியர் கோ.

அந்த அமைப்பின் 30ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியீடு காணும் அந்த நூலை அந்த அமைப்பிற்கே காணிக்கையாக பேராசிரியர் கோ தந்தார்.

இந்த உலகம் பெரிய நாடுகளுக்கே பலன் தருவதாகவும் சிறிய நாடுகளுக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் தெரிவித்த அவர், சிறிய நாடுகளை இரண்டாம் தர நாடுகளாகவே பார்ப்பதாகவும் தெரிவித்தார். பெரிய நாடுகளுக்கு 'ஜி7', 'ஜி20', 'பிரிக்ஸ்', 'பெர்ம்5' போன்ற குழுக்கள் இருக்கும் நிலையில் சிறிய நாடுகளுக்குச் சில குழுக்களே இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிறிய நாடுகளாக இருப்பதால் உள்ள சவால்களைத் தகர்த்து வெற்றி வாகை சூட முடியும் என்பதும் நாட்டின் அளவு அதன் தலையெழுத்தைத் தீர்மானிக்காது இல்லை என்பதும் இந்த நூலின் மையக் கருத்து என்றார் பேராசிரியர் கோ. அதற்கான பல ஆதாரங்களையும் தமது உரையில் எடுத்துகாட்டினார் அவர்.

உலகிலேயே அதிக தனிநபர் வருமானமுள்ள 10 நாடுகளில் எட்டு நாடுகள் சிறியவை. உலகின் தலைசிறந்த கல்வி முறைகளைக் கொண்டுள்ள 10 நாடுகளில் ஐந்து சிறிய நாடுகள். மிகக் குறைந்த ஊழல் நடக்கும் பத்தில் எட்டு நாடுகள் சிறிய நாடுகள். போட்டித்தன்மை மிகுந்த 10 பொருளியல்களில் சிறிய நாடுகளின் எண்ணிக்கை ஆறு. பாலின சமத்துவத்தில் அந்த எண்னிக்கை ஒன்பது. மகிழ்ச்சி நிறைந்த நாடுகள் அடிப்படையில் ஏழு. விளையாட்டுப் போட்டிகளில் கணிசமான பதக்கங்கள் வாங்கும் நாடுகளில் சிறிய நாடுகள் சிறந்து விளங்குகின்றன.

திரு அல்பர்ட் சுவா, பன்னாட்டு ஒத்துழைப்பு கவலைக்குரிய நிலையில் இருக்கும் வேளையில், பருவநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு, நோய்ப் பரவல் போன்ற உலகளாவிய சவால்களை ஒன்றிணைந்து எதிர்கொள்ளும் ஆற்றல் வலுவிழந்துள்ளது என்று கூறினார்.

இச்சூழலில் அனைத்துலக சட்டத்தை மதித்து அனைத்து நாடுகளுக்கும் சமமான உரிமைகளை நிலைநாட்டும் பலதரப்பு முறையைப் பாதுகாக்கும் முயற்சிகளை சிறிய நாடுகள் நிறுத்தக்கூடாது என்று அவர் பரிந்துரைத்தார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.